




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 04 | Issue: 070 | 4 Pages | 09.10.2026 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 070 | 4 பக்கங்கள் | 09.10.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மையில் காட்சி யவர்**

**விளக்கம்:**
ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத அறிவை உடையவர், யாம் வறுமை அடைந்தோம் என்று எண்ணியும் பிறர் பொருளை விரும்பார்.

## அமெரிக்காவில் வெளிநாட்டு மாணவர்களுக்கு புதிய சிக்கல்..!



வாஷிங்டன், அக்.9

அமெரிக்காவில் குடியேற்றம் தொடர்பாக அதிபர் டொனால்டு டிரம்ப் நிர்வாகம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. எச்1பி விசா, மாணவர் விசா உள்ளிட்ட பல்வேறு விசாக்களிலும் புதிய விதிமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அமெரிக்காவில் உயர்கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்களுக்கு மேலும் ஒரு புதிய கட்டுப்பாட்டை கொண்டுவர பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உயர்கல்வியை முடிக்கும் வெளிநாட்டு மாணவர்கள், அங்குள்ள நிறுவனங்களில் குறிப்பிட்ட காலம் பணி பயிற்சி பெறுவதற்கு ஆப்சனல் பிராக்டிகல் டிரெயினிங் (OPT) என்ற திட்டம் உள்ளது.

எப்1 விசா வைத்திருக்கும் மாணவர்கள், படிப்பின்போது வாரத்திற்கு 20 மணி நேரம் வரை பணிபுரிய முடியும். பட்டம் பெற்ற பிறகும் குறிப்பிட்ட காலத்திற்கு அமெரிக்காவில் பணிபுரியும் வாய்ப்பு இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

தற்போது ஓ.பி.டி. திட்டத்திற்கு விண்ணப்பிக்க 500 அமெரிக்க டாலர் (சுமார் ரூ.48 ஆயிரம்) கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

இந்த கட்டணத்தை 70 ஆயிரம் அமெரிக்க டாலராக (சுமார் ரூ.67 லட்சம்) உயர்த்த அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை பரிந்துரை செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஒரு வெளிநாட்டு மாணவர் ஓ.பி.டி. திட்டத்தில் முதல் முறையாக சேர விண்ணப்பிக்கும் போது இந்த கட்டணத்தை செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) பிரிவுகளில் படித்த மாணவர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் 24 மாத பணி பயிற்சி நீட்டிப்புக்கும் மேலும் 30 ஆயிரம் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.29 லட்சம்) கட்டணம் செலுத்த வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கட்டண நடவடிக்கைகள் மூலம் விசா முறைகேடுகளைத் தடுப்பது, குடியேற்ற அமைப்பின் நம்பகத்தன்மையை வலுப்படுத்துவது மற்றும் அமெரிக்க தொழிலாளர்களைப் பாதுகாப்பது ஆகியவை நோக்கமாக இருப்பதாக அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

மேலும், வேலை வழங்கும் நிறுவனங்கள், மாணவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் முறையான நடைமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களில் 31 சதவீதத்திற்கும் அதிகமானோர் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெல்ஜியத்தில் கல்விக் கட்டண உயர்வுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம்!



பிரஸ்ஸல்ஸ், அக். 9

பெல்ஜியத்தில் கல்விக் கட்டண உயர்வுக்கு எதிராக, மாணவர்கள் வன்முறையான போராட்டத்தில் ஈடுபட்டனர். பெல்ஜியத்தின் பிரஞ்சு மொழி பேசும் பிராந்தியங்களில், கல்விக் கட்டண உயர்வு மற்றும் பள்ளி உள்கட்டமைப்பு குறைபாடுகளுக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டம் தீவிர வன்முறையாக வெடித்துள்ளது. குறிப்பாக, லீஜ் மற்றும் தலைநகர் பிரஸ்ஸல்ஸ் ஆகிய நகரங்களில் நிலைமை மோசமடைந்துள்ளது. அண்டை நாடான பிரான்சில் நடக்கும் பள்ளி மாணவர்களின் போராட்டங்களால் ஈர்க்கப்பட்டு, கடந்த அக்டோபர் 1 முதல் பெல்ஜியத்தில் இந்த தன்னிச்சையான போராட்டங்கள் தொடங்கின.போராட்டத்திற்கான காரணங்கள்உயர்கல்விக்கான ஆண்டு கல்விக்கட்டணத்தை பிரஞ்சு மொழி பேசும் சமூக அரசு□835லிருந்து□1,194 (இந்திய மதிப்பில் ரூ. 90,541.56லிருந்து ரூ.1,29,469.00) ஆக உயர்த்தியதே இந்த போராட்டத்திற்கு முக்கிய காரணமாகும். அத்துடன், பள்ளிகளில் போதிய இடவசதி இல்லாமை, மோசமான பள்ளி கட்டிடங்கள், ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பொதுப் போக்குவரத்து கட்டண உயர்வு ஆகியவற்றைக் கண்டித்தும் மாணவர்கள் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர். தீவிரமடைந்த வன்முறைலீஜ் நகரில் நடைபெற்ற பேரணியில் 1,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். போராட்டத்தின் போது சில குழுக்கள் தீவிரவன்முறையில்ஈடுபட்டனர்.பள்ளிஜன்னல்களைஅடித்துநொறுக்கியும், குப்பைத் தொட்டிகளுக்கு தீ வைத்தும், சாலைகளை மறித்தும் அவர்கள் அராஜகத்தில் ஈடுபட்டனர். நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர, கலகத் தடுப்புப் போலீசார் கண்ணீர் புகைக்குண்டுகள் மற்றும் தண்ணீரைப் பீய்ச்சியடிக்கும் வாகனங்களை பயன்படுத்தினர். இந்த மோதல்களில் 22 போலீஸ் அதிகாரிகள் காயமடைந்தனர். கைது பள்ளிகள் மூடல் வன்முறையில் ஈடுபட்டதாக லீஜ் பகுதியில் மட்டும் இதுவரை 100க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 17 சிறுவர்களும் அடங்குவர். பதற்றமான சூழ்நிலை நிலவுவதால், லீஜ் நகரில் உள்ள பள்ளி வகுப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. முன்னதாக, இதே கல்விச் சீர்திருத்தங்களை எதிர்த்து கடந்த ஜூன் 2026லும் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து நடத்திய போராட்டமும் பெரிய அளவில் வன்முறையாக வெடித்தது குறிப்பிடத்தக்கது.

# ஜி.எஸ்.டி. 5 சதவீதம் சரிவு: தி.மு.க.வின் அரைவேக்காட்டு பிரச்சாரம் த.வெ.க. கடும் தாக்கு

சென்னை, அக். 9

அரசு நிர்வாக தோல்வி என்று அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு கூப்பாடு போடுபவர்களின் நோக்கம் அம்பலமாகி உள்ளதாக தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

"GST 5 சதவீதம் சரிவு... தமிழக அரசின் நிர்வாகத் தோல்வி" என்று கடந்த சில நாட்களாக தி.மு.க.வினரின் அரைவேக்காட்டு பிரச்சாரத்தின் உண்மை முகம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

Gross GSTஐ மட்டும் காட்டி மக்களை ஏமாற்ற முயன்றவர்களை, அதிகாரப்பூர்வத்தரவுநறுக்கென்று குட்டியுள்ளது. தமிழ்நாட்டிற்கு உண்மையில் கிடைக்கும் PostSettlement GST வருவாய் 16.1 சதவீதம் உயர்ந்துள்ளது என தமிழ்நாடு நிதித்துறை செயலாளரே தெளிவுபடுத்தியுள்ளார்.

அப்படியிருக்க, "5 சதவீதம் குறைந்துவிட்டது" என்று மட்டும்



கூறி பொருளாதாரம் வீழ்ச்சி, அரசு நிர்வாகத் தோல்வி என்று அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு கூப்பாடு போடுபவர்களின் நோக்கம் அம்பலமாகியுள்ளது.

உற்பத்தி மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு பொருட்களை விநியோகிக்கும் தமிழ்நாடுபோன்றமாநிலங்களில், IGST Settlement உள்ளிட்ட பல்வேறு காரணிகள் Gross GST எண்ணிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, தமிழ்நாட்டின் உண்மையான GST வருவாய் நிலையை மதிப்பிடும்போது PostSettlement GST தரவுக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குளிரூட்டப்பட்ட கட்டிடம் திறப்பு



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அடுத்த கவரப்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில்,மிட்சுபிஷிநிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதி (CSR) மூலம் கட்டப்பட்ட குளிரூட்டப்பட்ட காத்திருப்பு அறை, புறநோயாளிகளுக்கான சிகிச்சை அறை மற்றும் மருத்துவர் அறை உள்ளிட்ட வசதிகளைக் கொண்ட புதிய கட்டிடத்தின் திறப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

கவரப்பேட்டைஅரசுஆரம்பசுகாதார நிலையம் கவரப்பேட்டை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கு தொடர்ந்து மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. இங்கு தினமும் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். குறிப்பாக, கர்ப்பிணிப் பெண்களுக்கும் தேவையான மருத்துவ சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், காத்திருப்பு மற்றும் சிகிச்சைக்கான இடநெருக்கடி ஏற்பட்டது. இதையடுத்து, ஆரம்ப சுகாதார நிலைய நிர்வாகத்தின் கோரிக்கையின் பேரில், அப்பகுதியில் செயல்பட்டு வரும் மிட்சுபிஷி நிறுவனம் தனது சமூகப் பொறுப்பு நிதியின் மூலம் மருத்துவமனை வளாகத்தில் புதிய கட்டிடத்தை கட்டியது.

இந்த புதிய கட்டிடத்தில் நோயாளிகளுக்கான குளிரூட்டப்பட்ட காத்திருப்பு அறை, புறநோயாளிகளுக்கான சிகிச்சை அறை மற்றும் மருத்துவர் அறை உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் திறப்பு விழா மாவட்ட சுகாதாரத் துறை துணை இயக்குனர் பிரியா ராஜன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் தீபா லட்சுமி வரவேற்றார். சுகாதார ஆய்வாளர் அவினாஷ் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கும்மிடிப்பூண்டி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். விஜயகுமார், புதியகட்டிடத்தைதிறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

தொடர்ந்து, கவரப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுமக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவைகளை வழங்கி வரும் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் தீபா லட்சுமி,மருத்துவர்கள்,செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு எம்.எல்.ஏ. எஸ். விஜயகுமார் வாழ்த்து தெரிவித்தார்.

**ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வு**

முன்னதாக, மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குனர் பிரியா ராஜன், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் தீபா லட்சுமி முன்னிலையில் கவரப்பேட்டை, ஈகுவார்பாளையம் மற்றும் கண்ணன்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள், மருத்துவ சேவைகளின் செயல்பாடுகள், மருந்து மற்றும் மாத்திரைகளின்இருப்புஉள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்தார். மேலும், அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான கூடுதல் வசதிகள் மற்றும் தேவைகள் குறித்து வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் தீபா லட்சுமியிடம் கேட்டறிந்தார்.

புதிய குளிரூட்டப்பட்ட காத்திருப்பு அறை உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், கவரப்பேட்டைமற்றும்சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த நோயாளிகளுக்கு சிகிச்சைக்காக காத்திருக்கும் நேரத்தில் கூடுதல் வசதியும், மேம்பட்ட மருத்துவச் சேவையும் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டது.

## ட்ரூகாலர் 'ஸ்கேம் செக்கர்' தொழில்நுட்பம், மோசடி அழைப்பை கண்டறிதல் மற்றும் சமூகநுண்ணறிவை ஒருங்கிணைக்கிறது




சென்னை அக.9

தங்களுக்கு வருவது ஒரு ஒரு மோசடி அழைப்பா என்பதை அதிவிரைவாக அந்த கணத்திலேயே உறுதி செய்யவும் , சமீபத்திய மோசடி நடவடிக்கைகளின்போக்குகள்குறித்ததகவல்களை தெரிந்து வைத்துக் கொள்ளவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய 'ட்ரூகாலர் ஸ்கேம் செக்கர்' (Truecaller Scam Checker) தொழில்நுட்பத்தை , இணையம் மற்றும் செயலியில் ட்ரூகாலர் இன்று அறிமுகப்படுத்தியுள்ளது.

அழைப்பாளரை அடையாளம் காணுதல் மற்றும் ஸ்பேம் தடுப்பு பாதுகாப்பு அம்சங்களுக்கும் அப்பால் கூடுதலாக ட்ரூகாலரின் மோசடி அழைப்புப் பாதுகாப்பு வளையத்தை மேலும் விரிவுபடுத்துவதே இதன் நோக்கமாகும். இந்த புதிய தீர்வு , பல்வேறு மோசடி கண்டறிதலுக்கான செயல்திறன்களை ஒன்றிணைத்து, ஏதாவது சந்தேகத்திற்குரிய இணைய இணைப்புகளைச் சரிபார்க்கவும், தொலைபேசி எண்களைத் தேடி அடையாளம் காணவும் , மோசடி அழைப்பு தொடர்புடைய பொருந்த்தமான அறிக்கைகளை காணவும், எந்த ஒரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் முன்பாக சாத்த்தியக்கூறுள்ள மோசடி முயற்சிகள் பற்றி நன்கு புரிந்துகொள்ளவும் அனுமதிக்கிறது. ட்ரூகாலர் ஸ்கேம் செக்கர் மூலம், மக்கள் பின்வருபவற்றை சரிபார்க்கலாம் ஒரு இணைப்பை சரிபார்த்தல் (link) அத்தகைய ஒரு இணைப்பு தீய எண்ணத்துடனானதா அல்லது ஃபிஷிங் (phishing) முயற்சிக்குப் பயன்படுத்தப்படுவதா என்பதற்கான அறிகுறிகளைச் சரிபார்த்துக்கொள்ளும் வசதி .

ஒரு தொலைபேசி எண்ணை அடையாளம் காண: ட்ரூகாலரின் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் சமூக சமிக்கைகள் எதை அடையாளப்படுத்துகிறது என்பதை காண .

மோசடி பதிவு அறிக்கைகளை கண்டறிதல் இதே போன்றமோசடிஅழைப்புக்கள்குறித்துமற்றவர்கள் தெரிவித்த கருத்துக்களை காண . தங்களது கவலை குறித்து பயனர்கள் தானாகவே விவரங்களை பதிவு செய்தல் மற்றும் இணைப்புகள் அல்லது எண்கள் குறித்த கேள்விகள் மற்றும் அது தொடர்புடைய சமூக அறிக்கைகள் உட்பட உரிய பொருத்தமான முடிவுகளைப் பெறலாம் . இவை ஒன்றிணைந்து , சந்தேகத்திற்குரிய எந்த ஒரு செய்தியிலும் பொதுவாக இடம்பெறக்கூடிய மூன்று விஷயங்களை வெளிப்படுத்துகின்றன :

# பள்ளியில் மனிதமலம் கலக்கப்பட்ட விவகாரம்: சதி உள்ளதா என்பது பற்றி விசாரணை தேவை: அன்புமணி ராமதாஸ்



சென்னை, அக். 9

திண்டுக்கல் மானூர் பள்ளியில் மனிதமலம் கலக்கப்பட்ட விவகாரம்: பின்னணியில் சதி உள்ளதா? என்பது பற்றி விசாரணை தேவை என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார். அருவருக்கத்தக்க செயல்இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள மானூர் கிராமத்தில் அரசு தொடக்கப்பள்ளியில் குடிநீர் தொட்டிக்குள் மனிதக் கழிவு கலக்கப்பட்டதாகவும், இந்த நிகழ்வு இரு நாள்களாக மூடி மறைக்கப்பட்ட நிலையில் அதைக் கண்டித்து மாணவர்களின் பெற்றோர்களும், ஊர்மக்களுக்கும் போராட்டம் நடத்தியதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. மனிதத்தன்மையற்ற இத்தகைய அருவருக்கத்தக்க செயல் கண்டிக்கத்தக்கது. கல்வித்துறைஅதிகாரிகள்காலாண்டுவிடுமுறைமுடிந்து திங்கள்கிழமை பள்ளிக்கூடம் திறக்கப்பட்ட போது, உணவு தயாரிப்பதற்கான ஏற்பாடுகளில் பள்ளி ஊழியர்கள் ஈடுபட்ட போது, இந்தக் கொடுமை தெரியவந்துள்ளது. உடனடியாக தண்ணீர் தொட்டியை பள்ளிநிர்வாகமேசுத்தம்செய்ததும்,அந்தத்தொட்டியின் தண்ணீரில் சமைக்கப்பட்ட உணவை உட்கொள்ளும் குழந்தைகளுக்கு உடல்நல பாதிப்பு ஏற்படுமோ? என்ற பெற்றோரின் அச்சத்தையும், கவலையையும் போக்கும் வகையில் மாணவர்களுடன் கல்வித்துறை அதிகாரிகள் இன்று காலை உணவு அருந்தியதும் நம்பிக்கையளிக்கக் கூடியவை.சுற்றுச்சுவர்அதே நேரத்தில் இந்த நிகழ்வு வெளியில் தெரியாமல் மூடி மறைக்கப்பட்டது ஏன்? இந்த நிகழ்வின் பின்னணியில் சதித் திட்டம் ஏதேனும் உள்ளதா? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். இதற்கு காரணமானவர்கள் யார்? என்பது அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட வேண்டும்.மானூர் தொடக்கப்பள்ளியை சுற்றிலும் சுற்றுச்சுவர் கட்டப்படாததும், போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாததாதும் தான் , இரவு நேரங்களில் சமூக விரோதிகள் உள்ளே நுழைந்து இத்தகைய செயல்களை செய்வதற்குகாரணம்ஆகும்.இதைத்தடுக்கும்வகையில் மானூர் பள்ளி உள்பட தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரசு பள்ளிகளிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும். மானூர் அரசு தொடக்கப்பள்ளியில் குடிநீர் தொட்டி மாற்றப்பட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டாக்டரை எழுப்பி கேள்வி கேட்ட விவகாரம்: தவெக எம்.எல்.ஏ.வுக்கு ஆதரவாக போஸ்டர்கள் ஒட்டப்பட்டதால் பரபரப்பு




தூத்துக்குடி, அக். 9

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ.வாக இருப்ப வர் சரவணன். இவர் கடந்த சில நாட்களுக்கு முன் ஏரல் அரசு ஆஸ்பத்திரியில் நள்ளிரவில் ஆய்வு செய்தார். அப்போது அவர், அங்கிருந்த ஊழியர்களிடம் டாக்டர்கள், செவிலியர்கள் 24 மணி நேரமும் முறையாக பணியில் இருப்பது இல்லை. இரவு நேரங்களில் நோயாளிகளுக்கு உடனடியாக சிகிச்சை வழங்குவது கிடையாது, அவர்களை தூத்துக்குடி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விடுவதாக பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்துள்ளதாக கூறினார்.

மேலும் மருத்துவமனையில் தூங்கிக் கொண்டிருந்த டாக்டரை எழுப்பி, முதல்அமைச்சர் விஜய் தலைமையிலானஅரசுசிறப்பாகசெயல்பட்டுவருகிறது. பொதுமக்கள் எந்த விதமான பாதிப்புக்கும் ஆளாகாத வகையில் பொறுப்புடன் மருத்துவ பணியில் ஈடுபட வேண்டும். இனிமேல் இதுபோன்று பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கைவிடுத்து சென்றார். எம்.எல்.ஏ.வின் இந்த நடவடிக்கைக்கு மருத்துவர்கள் சங்கங்கள் கண்டனம் தெரிவித்து இருந்தன.

இந்நிலையில் ஸ்ரீவைகுண்டத்தில் நேற்று அரசு டாக்டர்களுக்கு எதிராகவும், எம்.எல்.ஏ.வுக்கு ஆதரவாகவும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு இருந்தன. அதாவது, 'பொதுமக்கள் வன்மையான கண்டனம்' என்ற பெயரில் அந்த போஸ்டர்கள் ஆங்காங்கே ஒட்டப்பட்டுஇருந்தன.மேலும்அதில்இந்தவிஷயத்தை எம்.எல்.ஏ. கேட்பதில் என்ன தவறு இருக்கிறது?, இது மக்கள் நலன் சார்ந்த பிரச்சினை என குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த போஸ்டர் விவகாரம் தற்போது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# விடுதி மாணவருக்கு பாலியல் வன்கொடுமை: வார்டன் கைது



திருவண்ணாமலை, அக். 9

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு பகுதியில் உள்ள விடுதியில் தங்கி10ம்வகுப்புபடித்துவரும்மாணவருக்கு பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்திற்காக, அந்த விடுதியின் வார்டனான இம்மானுவேல் என்பவரை போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர்.2 மாதங்களாக தொடர்ந்த கொடுமைதிருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டில் உள்ள ஒரு தங்கிப் படிக்கும் விடுதியில் 10ம் வகுப்பு மாணவன் ஒருவன் பயின்று வருகிறார். அந்த விடுதியில் கடந்த 2 மாதங்களாக வார்டனாகப் பணியாற்றி வந்த இம்மானுவேல் (வயது 25), மாணவருக்கு தொடர்ந்து கடுமையான பாலியல் தொல்லைகளையும், வன்கொடுமையையும் செய்து வந்துள்ளார்.பேருந்து நிலையத்தில் அம்பலமான கொடூரம்வார்டனின் பாலியல் கொடுமையைத் தாங்க முடியாத அந்த மாணவர், இன்று (வியாழக்கிழமை) விடுதியை விட்டு தப்பியோடி அருகில் உள்ள பேருந்து நிலையத்திற்கு சென்றுள்ளார்.அங்குதனியாகஅமர்ந்து அழுதுகொண்டிருந்த மாணவரைக் கண்ட பொதுமக்கள் மற்றும் அதிகாரிகள் அவரிடம் விசாரித்துள்ளனர். அப்போது, தனக்கு விடுதி வார்டன் செய்த கொடூரங்களை அந்த மாணவர் கண்ணீருடன் தெரிவித்துள்ளார். போக்சோ சட்டத்தில் நடவடிக்கைஇச்சம்பவம் குறித்து உடனடியாகபோலீசாருக்குதகவல்தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் மாணவரை மீட்டு விசாரணை நடத்தினர். மாணவர்கொடுத்தபுகாரின்பேரில்,போக்சோஉள்ளிட்ட கடுமையான சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்த போலீசார், தலைமறைவாக முயன்ற விடுதி வார்டன் இம்மானுவேலை உடனடியாக கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அரக்கோணமும் சென்னை பெருநகருடன் இணைகிறது; சி.எம்.டி.ஏ. எல்லையை விரிவாக்க முடிவு




சென்னை, அக். 9

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (சி.எம்.டி.ஏ.) எல்லையை தற்போதுள்ள 1,189 சதுர கிலோ மீட்டரில் இருந்து 5,904 சதுர கிலோ மீட்டராக விரிவாக்கம் செய்ய தமிழக அரசு நடவடிக்கைஎடுத்துள்ளது.இதன் ஒரு பகுதியாக ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அரக்கோணம் தாலுகாவும் சென்னை பெருநகரப் பகுதியில் இணைக்கப்படுகிறது. சென்னை பெருநகரப் பகுதி தற்போது 1,189 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது. இந்த பகுதிக்கான 2வது முழுமை திட்டத்தின் கால அவகாசம் நிறைவடையும் நிலையில் உள்ளது. இதையடுத்து, அடுத்த 20 ஆண்டுகளுக்கான 3வது முழுமைதிட்டத்தைதயாரிக்கும்பணிகள்கடந்த2022ம் ஆண்டு தொடங்கப்பட்டன.இதுதொடர்பாக பொதுமக்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டு, பல்வேறு தலைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.சுமார்40ஆயிரத்துக்கும்மேற்பட்டோரிடம் கருத்துகள் கேட்கப்பட்டு, 26 தலைப்புகளில் வரைவு அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.5,904 சதுர கிலோ மீட்டர்சென்னை பெருநகரின் எல்லையை விரிவாக்கம் செய்வதற்கான திட்டத்துக்கு கடந்த 2024ம் ஆண்டு தமிழக அரசு ஒப்புதல் அளித்தது. இதன்படி செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளுடன், ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள அரக்கோணம் தாலுகாவும் சி.எம்.டி.ஏ. எல்லைக்குள் கொண்டு வரப்படுகிறது.இதன் மூலம் சென்னை பெருநகரப் பகுதியின் மொத்த பரப்பளவு 5,904 சதுரகிலோ மீட்டராக அதிகரிக்கிறது.விரிவாக்க பகுதிகளிலும் திட்டம்முதற்கட்டமாக 1,189 சதுர கிலோமீட்டர்பரப்பளவை மட்டும் கணக்கில் கொண்டு 3வது முழுமை திட்டத்தை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வந்தன. இதற்கு பதிலாக, தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள பகுதிகளையும் உள்ளடக்கி முழுமை திட்டத்தை தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகளை ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்ள சி.எம்.டி.ஏ. அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக கூடுதல் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. இதையடுத்து, விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளை சி.எம்.டி.ஏ. கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அந்த பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் 3வது முழுமை திட்டத்தை தயாரிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.இதன் மூலம் சென்னை பெருநகரத்தின்திட்டமிட்ட வளர்ச்சியில் அரக்கோணம் உள்ளிட்ட புதிய பகுதிகளும் இடம்பெற உள்ளன.

# திருமணத்தை மீறிய உறவு; பிரியாணி அபிராமிக்கு ஜாமீன் மறுப்பு



சென்னை, அக். 9

திருமணத்தை மீறிய உறவு காரணமாக பெற்ற குழந்தைகளுக்கு பாலில் விஷம் கலந்து கொடுத்த பிரியாணி அபிராமிக்கு சென்னைஐகோர்ட்டுஜாமீன்வழங்க மறுப்பு தெரிவித்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் அடுத்த மூன்றாம் கட்டளை பகுதியை சேர்ந்தவர் விஜய். இவர் தனியார் வங்கி ஒன்றில் பணியாற்றி வந்தார். இவரது மனைவி அபிராமி. இந்த தம்பதிக்கு அஜய் என்ற மகனும் கார்னிகா என்ற பெண் குழந்தையும்இருந்தனர்.டிக்டாக்கில்வீடியோபதிவிட்டு பிரபலமான அபிராமிக்கு அப்பகுதியில் பிரியாணி கடையில் பணியாற்றி வந்த மீனாட்சி சுந்தரம் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. இவர்களது கள்ளக்காதல்விவகாரம்கணவரானவிஜய்க்குதெரியவர அவர் கடுமையாக கண்டித்தார்.

இதனால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த அபிராமி, மீனாட்சி சுந்தரத்துடன் சேர்ந்து வாழ முடிவெடுத்து இதற்குதடையாகஉள்ளகணவன்மற்றும்குழந்தைகளை கொலை செய்ய முடிவு செய்தார். கடந்த 2018ம் ஆண்டு தனது 2 குழந்தைகள் மற்றும் கணவருக்கு பாலில் தூக்க மாத்திரை கலந்து கொடுத்துள்ளார்.இதில் அதிர்ஷ்டவசமாக விஜய் உயிர் தப்பினார். இருப்பினும் 2 குழந்தைகளும் உயிரிழந்த சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் தொடர்பாக கணவர் விஜய் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதனையடுத்து வழக்குப்பதிவு செய்த போலீசார்அபிராமியைதேடிவந்தனர்.அப்போது கள்ளக்காதலன் மீனாட்சி சுந்தரத்துடன் தப்பி செல்ல முயன்ற அபிராமியை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்து புழல் சிறையில் அடைத்தனர்.இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

குழந்தைகளை கொன்ற வழக்கில் குன்றத்தூர் அபிராமிக்கும் கள்ளக்காதலன் மீனாட்சி சுந்தரத்திற்கும் சாகும் வகை சிறை தண்டனை என காஞ்சிபுரம் மகளிர் நீதிமன்றம்தீர்ப்பளித்தது.இதைஎதிர்த்துமேல்முறையீடு செய்த அபிராமி தனது மனுவில், தனக்கு காஞ்சிபுரம் மகளிர் நீதிமன்றம் வழங்கிய சிறை தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும். ஜாமீன் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.இந்த வழக்கானது நீதிபதிகள் என்.சதீஷ்குமார், கே.ராஜசேகர் ஆகியோர் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், தற்போதைய நிலையில் தண்டனையை நிறுத்தி வைக்க தகுதியான வழக்கு இது அல்ல என கூறி அவருக்கு ஜாமீன் வழங்க மறுத்து, மனுவை தள்ளுபடி செய்தனர். பிரதான மேல்முறையீட்டு வழக்கை நவம்பர் 4ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

# மூதாட்டி குளிப்பதை ரகசியமாக வீடியோ எடுத்த பெயிண்டர் கைது



சென்னை, அக். 9

சென்னை திருவொற்றியூர் பகுதியில் வீட்டின் குளியலறையில் மூதாட்டி ஒருவர் குளிப்பதை தனது மொபைல் போன் மூலம் ரகசியமாக படம் பிடித்த பெயிண்டர் ஒருவரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

சென்னை திருவொற்றியூர் மண்டலத்திற்கு உட்பட்ட பகுதியைச்சேர்ந்த மூதாட்டி ஒருவர், நேற்று முன்தினம் தனது வீட்டின் குளியலறையில் குளித்துக் கொண்டிருந்தார். அப்போது அதே பகுதியைச் சேர்ந்த பெயிண்டர் கார்த்திக் (வயது 40) என்பவர், குளியலறையின் ஜன்னல் வழியாக தனது மொபைல் போனைப் பயன்படுத்தி மூதாட்டியை ரகசியமாக வீடியோ எடுத்துள்ளார். ஜன்னல் அருகே மொபைல் போன் நீட்டப்பட்டிருப்பதை தற்செயலாக கவனித்த மூதாட்டி அதிர்ச்சியடைந்து சத்தமாக கூச்சலிட்டார்.

மூதாட்டியின் அலறல் சத்தத்தைக் கேட்டு ஓடிவந்த அவரது மகன் மற்றும் அக்கம் பக்கத்தினர், அங்கிருந்து தப்பியோட முயன்ற கார்த்திக்கைதுரத்திப் பிடித்தனர். பின்னர் அவருக்கு தர்ம அடி கொடுத்த பொதுமக்கள், அவரை திருவொற்றியூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். கார்த்திக் மது போதையில் இருந்ததும், மனைவியைப் பிரிந்து வாழ்ந்து வந்ததும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து மூதாட்டி அளித்த புகாரின் பேரில், திருவொற்றியூர் குற்றப்பிரிவு போலீசார் கார்த்திக் மீது பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். இதனைத் தொடர்ந்து அவரது மொபைல் போனைப் பறிமுதல் செய்த போலீசார், அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மூதாட்டி குளிப்பதை வீடியோ எடுத்த இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தவெக ஆட்சியில் காவல்துறை தூங்குகிறதா? நயினார் நாகேந்திரன் கேள்வி



சென்னை, அக். 9

தமிழகபாஜகதலைவர்தனதுஎக்ஸ்தளத்தில் பதிவிட்டுள்ளதாவது: சமீபத்தில் கும்மிடிப்பூண்டியில்3வயதுபிஞ்சுக்குழந்தை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு முட்புதரில் வீசப்பட்ட கொடூரச் சம்பவத்தின் துயரத்திலிருந்தேநாம்இன்னும்மீளவில்லை; அதற்குள் அடுத்த கொடூரமாக, சென்னை திருவொற்றியூரில் வடமாநிலத் தொழிலாளர் குடும்பத்தைச்சேர்ந்த5வயதுபிஞ்சுக்குழந்தைபாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் ஒட்டுமொத்த தமிழகத்தையும் அதிர்ச்சியிலும் பெருந்துயரிலும் ஆழ்த்தியுள்ளது. வாழ்வாதாரம் தேடி தமிழகத்தை நம்பி வந்த ஏழைத் தொழிலாளியின் குழந்தைக்குத் தலைநகரிலேயே பாதுகாப்பில்லாத அவல நிலையை எண்ணி நெஞ்சம் பதறுகிறது.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிரான இத்தகைய கொடூரங்கள் தமிழகத்தில் அடுத்தடுத்துத் தொடர்கதையாகிவருவதுமிகுந்தவேதனையளிக்கிறது. வெற்றுப் பேச்சுகளால் அமைந்த விஜய் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் முடங்கிவிட்டது. காவல்துறையையும் உள்துறையையும் தன் வசம் வைத்துள்ள முதல் அமைச்சர் விஜய் அவர்கள் செயலற்றுக் கிடப்பதால், பொதுமக்களே வீதியில் இறங்கிக் குற்றவாளிகளைப் பிடிக்கும் அவல நிலை உருவாகியுள்ளது.

குற்றவாளிகளுக்குச் சட்டத்தின் மீதான பயம் துளியும் இல்லாமல் போனதற்கும், குற்றங்கள் தலைவிரித்தாடுவதற்கும் இந்த ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடும் அனுபவமின்மையுமே முக்கியக் காரணம்.இக்கொடூரச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிக்கு போக்சோ சட்டத்தின் கீழ் விரைவு நீதிமன்றம் மூலம் அதிகபட்சத் தண்டனையைப் பெற்றுத் தருவதோடு, பாதிக்கப்பட்ட குழந்தைக்கு அரசே உயர்தர மருத்துவ சிகிச்சையை முன்னின்று வழங்க வேண்டும். இனியாவது வெற்றுப் பிம்ப அரசியலை விட்டுவிட்டு, பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் உடனடியாகக் களத்தில் இறங்கிக் கவனம் செலுத்த வேண்டும்; சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றத் தவறினால், தவெக அரசுக்குத் தமிழக மக்கள் நிச்சயம் தகுந்த பாடம் கற்பிப்பார்கள்" இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# தூத்துக்குடி அருகே மேய்ச்சலுக்கு சென்ற 37 ஆடுகள் திடீர் உயிரிழப்பு: விஷக்கழிவு கலந்த நீர் காரணமா?



தூத்துக்குடி, அக். 9

தூத்துக்குடி அருகே மேய்ச்சலுக்கு சென்ற 37 ஆடுகள் ஒரே நேரத்தில் உயிரிழந்தன. தேங்கி நின்ற மழைநீரில் ரசாயன விஷக்கழிவு கலந்திருந்த நிலையில், அதனைப் பருகியதால் ஆடுகள் உயிரிழந்ததாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தூத்துக்குடி அருகே உள்ள மீளவிட்டானை சேர்ந்தவர் சுடலை. கால்நடை விவசாயியான இவர் சுமார் 300 ஆடுகளை வளர்த்து வருகிறார். காலாங்கரை பகுதியில் உள்ள விளைநிலத்தில் உரத்திற்காக அமைக்கப்பட்டிருந்த ஆட்டுக்கிடையில், நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகளை வைத்து பராமரித்து வந்தார்.

நேற்று காலை தூத்துக்குடி அருகேயுள்ள வீரநாயக்கன்தட்டு பகுதியில் சுமார் 70 ஆடுகளை மேய்ச்சலுக்கு விட்டிருந்தார். நேற்று மாலை மேய்ச்சலுக்குசென்றஆடுகளைகாணாததால்,அப்பகுதி மக்களின்உதவியுடன்தேடியபோதுகாட்டுப்பகுதிக்குள் ஆங்காங்கே37ஆடுகள்இறந்துகிடப்பதுதெரியவந்தது. மேலும் ஒரு சில ஆடுகள் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தன.

இதனிடையே வீரநாயக்கன்தட்டு பகுதியில் உள்ள குடோன் அருகே, நேற்று அதிகாலை பெய்த மழையால் பெருக்கெடுத்த தண்ணீர் தேங்கியிருந்தது. அதில் ரசாயன விஷக்கழிவுகள் கலந்திருந்த நிலையில், அதை மேய்ச்சலுக்குச் சென்ற ஆடுகள் குடித்த காரணத்தால் தான் உயிரிழப்பு நேரிட்டதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஒரே நேரத்தில் 37 ஆடுகள் வரை இறந்துள்ளதால் தனது வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக வேதனையுடன் தெரிவித்த சுடலை, தனக்கு உரிய இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த தூத்துக்குடி தாசில்தார் திருமணி ஸ்டாலின், கால்நடைத்துறை அதிகாரிகள் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு நடத்தினர். குடோன் அருகே தேங்கி நின்ற தண்ணீரின் மாதிரிகளை சேகரித்த அதிகாரிகள், அதனை ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலும் திடீரெனஇறந்த37ஆடுகளுக்கும்சம்பவஇடத்திலேயே உடற்கூறாய்வு மேற்கொள்ளப்பட்டது.

# திருவான்மியூர் சாலையில் திடீரென ஏற்பட்ட பள்ளத்தால் தலைக்குப்புற கவிழ்ந்த கார்



சென்னை, அக். 9

சென்னை திருவான்மியூர் டைடல் பார்க் அருகே மெட்ரோ ரெயில் பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் இப்பகுதியில் இன்று காலை திடீரென பள்ளம் ஏற்பட்டது. அப்போது சாலையில் சென்று கொண்டிருந்த சொகுசு கார் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துகுள்ளானது.காரில்2பேர்பயணம்செய்துள்ளனர். இதனைகண்டஅந்தபகுதிமக்கள்காவல்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். தகவலின் பேரில் விரைந்து வந்த போக்குவரத்து போலீசார் கிரேன் உதவி மூலம் பள்ளத்தில் இருந்து காரை வெளியே கொண்டு வந்தனர். காரில் பயணம் செய்த 2 பேரும் லேசான காயங்களுடன் நல்வாய்ப்பாக உயிர் தப்பினர். இந்த விபத்தால் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பள்ளத்தை சரிசெய்யும் பணியில் மெட்ரோ ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். சம்பவ இடத்தில் இருக்கும் பொதுப்பணித்துறை மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், பள்ளம்உருவானகாரணங்களைவிசாரித்துவருகின்றனர். இந்த பள்ளம் சரிசெய்யப்படும் எனவும், பாதை மீண்டும் சாதாரண நிலைக்கு கொண்டுவரப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உருவக்கேலி சர்ச்சை: மு.க.ஸ்டாலின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி புகார்



சென்னை, அக். 9

தாராபுரத்தில் கடந்த 2ம் தேதி நடந்த தி.மு.க. பிரசார கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவை விமர் சித்து பேசினார். அதில், 'சத்தியத்துக்கு விரோதமாக செயல்பட்ட அந்த வேட்பாளரை மக்களான நீங்களே இப்போது என்ன சொல்லி கூப் பிடுறீங்க?. பெட்டி பாமா. இன்னொன்னு இருக்கு, 'பல்டி' பாமா. எப்படி தான் அந்த உருவத்தை வெச்சுக்கிட்டு பல்டி அடிச்சாங்கன்னு தெரியல' என்று பேசினார்.இந்த பேச்சு சமூகவலைத் தளங்களில் வெளியான நிலையில் ஆளும் த.வெ.க. தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. மேலும் சத்தியபாமாவை உருவக்கேலி செய்ததாக மு.க.ஸ்டாலின் மீது தேர்தல் கமிஷனில் புகார் அளிக்கப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக வழக்குப்பதியக்கோரி போலீஸ் டி.ஜி.பி.யிடமும் த. வெ.க.வினர் மனு அளித்தனர். இந்த நிலையில், தவெக வேட்பாளர் சத்யபாமாவை உருவக்கேலிசெய்ததாக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மீது திருச்சியின் பல்வேறு காவல்நிலையங்களில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என திருச்சிதவெக மகளிர்அணியினர்புகார்அளித்துள்ளனர். புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# நம்பி வாக்களித்த பெண்களுக்கு பாதுகாப்பில்லை தவெகவை விமர்சித்த மேயர் பிரியா



சென்னை, அக். 9

தவெகவை நம்பி வாக்களித்த பெண்களுக்கு பாதுகாப்பில்லை என மேயர் பிரியா விமர்சித்துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில் முப்பெரும் விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் திமுக துணை பொதுச் செயலாளர் எம்.பி. கனிமொழி, கலாநிதி வீராசாமி, முன்னாள் எம்.பி அப்துல்லா, சென்னை மேயர் பிரியா, முன்னாள் சட்டமன்ற அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய மேயர் பிரியா தவெக ஆட்சியை பற்றி கடுமையாக விமர்சித்து பேசியுள்ளார்.

இது தொடர்பாக அவர் பேசியதாவது :

முதல் அமைச்சர் ஆனால் உங்கள் பையன் விஜி, உங்க அண்ணன் விஜி, உங்க தம்பி விஜி அப்டினு சொன்னாரு, ஆனால் தற்போது 7 வயது 8 வயது சிறுமிகள் எல்லாம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுகிறார்கள். அப்போது எங்க போனீங்க இந்த "சினிமாவில் வர மாதிரி நேப்பியர் பிரிட்ஜ் கீழ கயிறு கட்டி தொங்க விடுவாங்க" என நினைத்து உங்களுக்கு நம்பி வாக்களித்த மக்களுக்கு ஒரு சிறிய பாதுகாப்பு கூட இல்லை. குறிப்பாக, பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாத அளவுக்கு தமிழக அரசை நடத்தி வருகிறீர்கள். தவெக சட்டமன்ற உறுப்பினர் கீர்த்தனா வேறோரு நிகழ்ச்சியில் உரையாற்றிய போது ரீல்ஸ் போட்டு ஆட்சியை பிடித்து விட்டோம் என தெரிவித்ததாகவும், அதற்கு பதிலளிக்கும் வகையில் எங்களுக்கு ரீல்ஸ் போட வேண்டிய அவசியம் இல்லை. எங்களுக்கு தலைவர் இருக்காரு, அக்கா இருக்காங்க, சின்னவர் இருக்காரு எங்களுக்கு கொள்கை இருக்கு என விமர்சித்து பேசியுள்ளார்.

# ஸ்மார்ட் மீட்டர் டெண்டர் அறிவிப்பை திரும்பப்பெறுக: அரசுக்கு டி.டி.வி. தினகரன் வலியுறுத்தல்



சென்னை, அக் 9

த.வெ.க. அரசு யாருக்காக ஆட்சி நடத்தப்போகிறது என்ற கேள்விதான் ஒட்டுமொத்த மக்களின் மத்தியிலும் தற்போதுஎழுந்துள்ளதாகடி.டி.வி.தினகரன்வலியுறுத்தி உள்ளார். ஒப்பந்தப்புள்ளிஇதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட 12 மண்டலங்களில் மறுசீரமைக்கப்பட்ட மின்விநியோக திட்டத்தின் மூலம் (RevampedDistributionSectorScheme)ஸ்மார்ட்மீட்டர்களைப் பொருத்துவதற்காக தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் வெளியிட்டிருக்கும் ஒப்பந்தப்புள்ளிகளுக்குக் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.ஸ்மார்ட் மீட்டர்சென்னை மாநகரத்தில் உள்ள அனைத்து நுகர்வோர்களுக்கும், மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ள 50 லட்சம் தொழில் மற்றும் வணிக நுகர்வோர்களுக்கும் ஸ்மார்ட் மீட்டர்கள் அமைக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் என்ற நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றிருந்த அறிவிப்பை மின்சார வாரியமே செயல்படுத்த முன்வராமல், தனியாருக்குத் தாரைவார்க்கும் வகையில் ஒப்பந்தப்புள்ளிகளை அறிவித்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணியைத் தனியாருக்குத் தாரைவார்க்கும் மின்சார வாரியத்தின் முடிவால், குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் 200 யூனிட் இலவச மின்சாரமும், விவசாயம் மற்றும் நெசவுத் தொழிலுக்கு வழங்கப்படும் இலவசமின்சாரமும்நிறுத்தப்படும்அபாயம்உருவாகும் என்பதோடு, மின்சார வாரியத்தில் தமிழக இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பும் பறிபோகும் சூழல் ஏற்படும் என மின்வாரியத் தொழிற்சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளனடெண்டர் அறிவிப்புபீகார் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங்களில் இதேபோன்று ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை அமல்படுத்தி, ரீசார்ஜ் செய்ய தவறினால் மின் துண்டிப்பு மற்றும் அபராதம் விதிக்கப்பட்டதற்கு எதிராக, அம்மாநிலங்களை சேர்ந்த மக்கள் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து போராடி கொண்டிருப்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது.அதோடு, தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் ஸ்மார்ட் மீட்டர் திட்டம் Prepaid திட்டமா அல்லது Postpaid திட்டமா? தமிழக மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சலுகை தொடருமா? Peak Hour நேரத்தில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுமா? ஏற்கனவே உள்ள 3 கோடி மீட்டர்களின் நிலை என்ன? என மின் நுகர்வோரின் எந்தவொரு கேள்விக்கும் பதில் அளிக்காமல், மொட்டைக் கடுதாசி போல டெண்டர் அறிவிப்பை வெளியிட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது.யாருக்காக ஆட்சிஆட்சிப் பொறுப்பேற்ற இந்த ஐந்து மாதங்களில் தூய்மைப் பணிகள் தொடங்கி, குடிநீர் விநியோகம், அரசுப் பேருந்துகளுக்கானஓட்டுநர்கள்,நடத்துநர்கள்நியமனம், பாதாளச் சாக்கடைத் திட்டம், ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணிகள் என தமிழகத்தின் அனைத்துப் பணிகளையும் தனியாரிடம் ஒப்படைத்துவிட்டு, த.வெ.க. அரசு யாருக்காக ஆட்சி நடத்தப்போகிறது என்ற கேள்விதான் ஒட்டுமொத்த மக்களின் மத்தியிலும் தற்போது எழுந்துள்ளது.எனவே, தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கூடுதல் சுமையை ஏற்படுத்துவதோடு, இளைஞர்களின் வேலைவாய்ப்பையும் கேள்விக்குறியாக்கும் சென்னை உட்பட 12 மண்டலங்களில் ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்துவதற்குமின்பகிர்மானக்கழகம்வெளியிட்டிருக்கும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான அறிவிப்பை உடனடியாகத் திரும்ப பெற வேண்டும் என த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொப்பரை தேங்காய் விலை உயராததால் தென்னை விவசாயிகள் கவலை



ஈரோடு, அக். 9

வரத்து குறைந்த நிலையிலும், தேங்காய், கொப்பரை விலை உயராததால்,தென்னை விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இது குறித்து தமிழ்நாடு சிறு, குறு விவசாயிகள் சங்க மாநில தலைவர் சுதந்திரராசு கூறியதாவது:கோடை மழை, பருவமழையில் நன்கு வளர்ந்து, பூப்பிடித்து ஜனவரி மே மாதங்களில் தேங்காய் சீசன் நன்றாக இருக்கும். கடந்தாண்டு மழை குறைவு; இந்தாண்டு சுத்தமாக மழை இல்லாததால், தேங்காய் வரத்து சரிந்துள்ளது.நேற்று மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், ஒரு கிலோ தேங்காய், ரூ50.19 ரூ53.63க்கும், கடந்த, 3ம் தேதி பெருந்துறைவிற்பனைகூடத்தில்ஒருகிலோகொப்பரை தேங்காய், ரூ.143.01 முதல் ரூ.155.19க்கும் விற்பனையாகியுள்ளது. இந்தாண்டு அதிகபட்சமாக, ரூ.180க்கு மேல் கொப்பரை தேங்காய் விலை போகவில்லை.வரும் ஜனவரி மாத சீசனுக்கு கடந்த மாதமே குரும்பை பிடித்து, 5 மாதத்தில் காய் முதிர்ந்து பலன் தர வேண்டும். கடும் வெயிலால் பெரும்பாலான தென்னையில் குரும்பை பிடிக்காமலும், பிடித்த குரும்பையில் பூ உதிர்ந்தும் கவலை அடைய செய்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு: பாதுகாப்பு கருதி 2 ஆவது நாளாக சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை

பெரியகுளம், அக். 9

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இயற்கை எழில் சூழ கும்பக்கரை அருவி அமைந்துள்ளது. தேனி மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் கேரளம், கர்நாடகா, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வந்து குளித்து மகிழ்ந்து செல்கின்றனர்.

அருவிக்கு மேற்கு தொடர்ச்சி மலை, வட்டக்கானல், பாம்பார்புரம், வெள்ள கெவி உள்ளிட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர்வரத்து ஏற்படுகிறது. கடந்த சில மாதங்களாக போதிய மழை இல்லாததால் அருவி வறண்டு காணப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கொடைக்கானல் வனப்பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால், கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு நீடித்து வருவதால், பாதுகாப்பு கருதி 2வது நாளாக சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

அருவிப்பகுதிக்குள் சுற்றுலா பயணிகள் செல்லாத வகையில் நுழைவு பகுதியில் உள்ள இரும்பு கதவு பூட்டப்பட்டது. இதனால் கும்பக்கரை அருவிக்கு வந்த சுற்றுலா பயணிகள் குளிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்.

# அரசுப் பள்ளியின் குடிநீர் தொட்டியில் மனிதக்கழிவு கலந்ததாக புகார்: அதிகாரிகள் ஆய்வு



கீரனூர், அக். 9

பழனி அருகே அரசு பள்ளி குடிநீர் தொட்டியில் மனிதக்கழிவு கலக்கப்பட்டது குறித்து அறிந்த மாணவர்களின் பெற்றோர் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.அரசு பள்ளிபழனி அருகே மானூரில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி உள்ளது. இங்கு மானூர்பகுதியைசேர்ந்தசுமார்100மாணவ,மாணவிகள் படித்து வருகின்றனர். இந்நிலையில் இங்குள்ள பள்ளி குடிநீர் தொட்டியில் மனிதக்கழிவு கலக்கப்பட்டதாக நேற்று தகவல் பரவியது. இதுகுறித்து தகவலறிந்த மாணவர்களின் பெற்றோர் பள்ளிக்கு திரண்டு வந்து ஆசிரியர்களிடம் வாக்குவாதம் செய்தனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும் கீரனூர் போலீசாரும் சம்பவ இடத்திற்குவந்துபள்ளிஆசிரியர்கள்,பெற்றோர்களிடம் விசாரணை நடத்தினர்.விசாரணையில், காலாண்டு தேர்வு விடுமுறை முடிந்து கடந்த 5ந்தேதி பள்ளி திறக்கப்பட்டது. காலையில் பணிக்கு வந்த சத்துணவு ஊழியர்கள்,மாணவர்களுக்குகுடிநீருக்காகவைத்திருந்த பிளாஸ்டிக் தொட்டியை பார்த்தபோது, அதில் மனிதக்கழிவு இருந்ததாகவும், இதுபற்றி பள்ளி தலைமை ஆசிரியரிடம் தெரியப்படுத்தி அதை உடனடியாக அப்புறப்படுத்தி சுத்தம் செய்ததும் தெரியவந்தது.குடிநீர் தொட்டியில்இந்த சம்பவம் குறித்து பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயக்குமார் கூறுகையில், குடிநீர் தட்டுப்பாடு உள்ளதால் பிளாஸ்டிக் தொட்டி வைத்து அதில் தினமும் குடிநீர் நிரப்பி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதன்படி காலாண்டு தேர்வு முடிந்து கடந்த 5ந்தேதி பள்ளி திறக்கப்பட்டது. காலையில் வந்த பணியாளர்கள் தொட்டியில் குடிநீர் நிரப்புவதற்காக பார்த்தனர். அப்போது, அதில் மனிதக்கழிவு இருந்தது.பின்பு அந்த தொட்டியை சுத்தம் செய்து அப்புறப்படுத்தி தனியாக வைத்து விட்டோம். இதுபற்றி கல்வித்துறை உயர் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தினோம். அந்த தொட்டியில் தண்ணீர் எதுவும் இல்லாததால் யாரும் குடித்திருக்க வாய்ப்பில்லை. சுகாதார அலுவலர்களும் வந்து பார்வையிட்டு சென்றனர் என்றார்.போலீஸ் விசாரணைமாணவர்களின் பெற்றோர் கூறும்போது, பள்ளியில் குடிநீர், சுகாதாரம் என போதிய அடிப்படை வசதிகள் இல்லை. பள்ளிக்கு அருகில் திறந்த வெளிகழிப்பிடமாக பயன்படுத்தி வருகின்றனர். ஆனாலும் பள்ளி நிர்வாகம் வளாகத்தை தூய்மையாக வைத்திருக்கிறது. எனினும் பள்ளியில் குடிநீர், கழிப்பிடம், கண்காணிப்பு கேமரா ஆகியவற்றை பொருத்த வேண்டும்.இந்த சம்பவம் குறித்து மாவட்ட நிர்வாகம் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளி மாணவர்களின் சுகாதாரத்தை உறுதி செய்ய வேண்டும் என்றனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் பழனி அருகே மானூரில் அரசு பள்ளியின் குடிநீர் தொட்டியில் மனிதக்கழிவு கலந்ததாக புகார் எழுந்த நிலையில் அதிகாரிகள் ஆய்வு நடத்தினர்.காலை உணவுக்கு தண்ணீரை பயன்படுத்தி இருக்கலாம் என சந்தேகித்த பெற்றோர்கள் போராட்டம் நடத்திய நிலையில் ஆய்வு செய்த அதிகாரிகள் மாணவர்களுடன் இணைந்து காலை உணவு சாப்பிட்டனர்.மேலும் படிக்க

# போக்சோ வழக்கில் சிறப்பாக பணியாற்றிய போலீசாருக்கு நெல்லை சரக டி.ஐ.ஜி. பாராட்டு




தூத்துக்குடி, அக். 9

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் பகுதியில் போக்சோ வழக்கில் சிறப்பாக பணியாற்றிய இன்ஸ்பெக்டர், ஏட்டு ஆகியோரை திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி. சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட போக்சோ வழக்கில், போலீஸ் இன்ஸ்பெக்டர் லட்சுமி பிரபா துரிதமாகவும் திறம்படவும் புலனாய்வு மேற்கொண்டு, உரிய சாட்சிகள் மற்றும் ஆவண ஆதாரங்களை முறையாகச் சேகரித்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களை முறையாக ஒருங்கிணைத்து, குற்றவாளிக்குதண்டனைபெற்றுத்தருவதில்தலைமைக் காவலர் (ஏட்டு) அரிராணி முக்கியப பங்காற்றினார்.

# கோவில்பட்டியில் 23 கிலோ புகையிலை பொருட்கள், கார் பறிமுதல்: ஒருவர் கைது





தூத்துக்குடி, அக். 9

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் 23 கிலோ புகையிலை பொருட்கள், ஒரு கார் ஆகியவற்றை பறிமுதல் செய்த போலீசார், இது தொடர்பாக ஒரு நபரை கைது செய்தனர்.போலீசார் ரோந்து பணிதூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் கோவில் அருகில் உள்ள ஓடை அருகில் சந்தேகப்படும்படியாக ஒரு காரில் வந்த நபரை பிடித்து சோதனை செய்தனர். அதில் அந்த நபர் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனைக்காக காரில் வைத்திருந்தது தெரியவந்தது. இது தொடர்பாக கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மாரியப்பன் வழக்குப்பதிவு செய்து தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனைக்காக காரில் வைத்திருந்த கோவில்பட்டி ஊரணிபகுதியைசேர்ந்தசெல்வம்மகன்பால்பாண்டியன் (வயது 43) என்பவரை கைது செய்து, அவரிடமிருந்து 23 கிலோ புகையிலை பொருட்கள் மற்றும் காரையும் பறிமுதல் செய்தார்.

# ரேஷன் கடை பருப்பு மூட்டையில் 2.5 கிலோ சிமெண்ட் கல்: பொதுமக்கள் அதிர்ச்சி





திருவாரூர், அக். 9

ரேஷன் கடையில் பொருட்கள் வழங்கப்பட்ட பருப்பு மூட்டையில் 2.5 கிலோ சிமெண்ட் கல் இருந்ததை பார்த்து பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.2.5 கிலோ சிமெண்ட் கல்திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அருகே உதயமார்த்தாண்டபுரம் நாச்சிகுளம் பகுதியில் உள்ள ரேஷன் கடை ஒன்று செயல்பட்டுவருகிறது.சுமார்ஆயிரத்துக்கும்மேற்பட்ட குடும்ப அட்டைத்தாரர்கள் பொருள் கொடுக்கும்போது வாங்குவதற்காக ரேஷன் கடைக்கு வருவது வழக்கம். இந்த நிலையில், நேற்று அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது. இதனை பெறுவதற்காக அப்பகுதி மக்கள் அனைவரும் வந்துள்ளனர்.அப்போது குடும்ப அட்டைத்தாரர் ஒருவருக்கு பருப்பு வழங்கப்பட இருந்தது. விற்பனையாளர் பருப்பு வழங்கும்போது மூட்டையில்கல்இருந்தது.இதனைபார்த்தபொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அந்த கல்லின் மதிப்பு சுமார் 2.5 கிலோ எடையில் இருந்ததாக பொருள் வாங்க பொதுமக்கள் தெரிவித்தனர். இதனை அப்பகுதி மக்கள் வீடியோவாக பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து வருகின்றனர். பருப்பு மூட்டையில் எப்படி கல் வந்தது ? என கேள்வி எழுப்பினர். இது குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வள்ளியூரில் அரசு பஸ் நடத்துநர் மரணத்தில் சந்தேகம்: 5 பேர் கைது



திருநெல்வேலி, அக். 9

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பகுதியில் அரசு போக்குவரத்துக் கழக பஸ் நடத்துநர் சந்தேக மரண வழக்கில் போலீசார் விசாரணையில் 5 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் காவல் நிலைய சரகத்தில், அரசு போக்குவரத்துக் கழக பஸ் நடத்துநராக வள்ளியூரைச்சேர்ந்தசண்முகம்மகன்சிவசுப்பிரமணியன் (வயது 52) பணிபுரிந்து வந்தார். இவர் கடந்த 5.10.2026 அன்று, மது போதையில் காயங்களுடன் வீட்டிற்கு சென்ற நிலையில் உயிரிழந்தார். இது தொடர்பாக வள்ளியூர் காவல் நிலையத்தில் சந்தேக மரண வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

முதற்கட்ட விசாரணையில், சிவசுப்பிரமணியன் மது அருந்திக் கொண்டிருந்தபோது அவருக்கும் உடனிருந்த நபர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டதும்,

அதனைத் தொடர்ந்து 5 பேர் சேர்ந்து அவரை தாக்கியதும் தெரியவந்தது. விசாரணையின் அடிப்படையில் வள்ளியூரைச் சேர்ந்தவர்களான சந்தனசுதன்(29), மணிகண்டன்(எ) கொண்டா(33), முத்துகிருஷ்ணன்(எ) தழும்பு முத்துகிருஷ்ணன்(45), களக்காட்டைச் சேர்ந்த சாமிநாதன்(36), மஞ்சங்குளத்தைச்சேர்ந்த பாண்டி ஆகிய 5 பேரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

09.10.2026

# தானம், பாகப்பிரிவினைக்கு காகிதமில்லா பத்திரப்பதிவு நவம்பர் 2 முதல் அமல்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, அக். 9

தமிழகத்தில் செட்டில்மென்ட், பாகப்பிரிவினை, விடுதலை தொடர்பான பத்திரங்களை காகிதமில்லா முறையில் பதிவு செய்யும் திட்டம், நவம்பர் 2 முதல் அமலுக்கு வரும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.




புதிய திட்டங்களில் வீடு, மனை விற்பனை பத்திரங்களை சார்பதிவாளர் அலுவலகம் செல்லாமல் பதிவு செய்யும் திட்டம் ஆகஸ்ட் 17 முதல் அமலுக்கு வந்தது. இதையடுத்து, தானப்பத்திரம், பாகப்பிரிவினை, விடுதலை, தானம் ரத்து ஆகிய பத்திரங்களை பதிவு செய்வது, 'ஆன்லைன்' முறைக்கு மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் வரும் 15 முதல் அமலுக்கு வரும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் இந்த நான்கு வகை பத்திரங்களையும் காகிதமில்லா முறையில் பத்திரப்பதிவு செய்யும் திட்டத்துக்கான கணினி மென்பொருள் தயாரிக்கப்பட்டு உள்ளது. இதையடுத்து இத்திட்டம் வருகிற நவம்பர் 2ம் தேதி முதல் அமலுக்கு வரும் என பதிவுத்துறை அறிவித்துள்ளது. இதற்கான அரசாணையை பதிவுத்துறை செயலர் குமரகுருபரன் பிறப்பித்துள்ளார். பதிவுத்துறையின் 'ஸ்டார் 3.0' மென்பொருளில் இதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# அரசு நிறுவனங்களுக்கும் 'ஆன்லைன்' முறையில் பத்திரப்பதிவு மேற்கொள்ள அனுமதி





சென்னை, அக். 9

வீட்டுவசதி வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவையும் நிலம், கட்டிடம் தொடர்பான பத்திரங்களை 'ஆன்லைன்' முறையில் பதிவு செய்யலாம்.

தமிழகத்தில் வீட்டுவசதி வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் உள்ளிட்ட அரசு நிறுவனங்களும், 'ஆன்லைன்' முறையில் பத்திரப்பதிவு மேற்கொள்ள பதிவுத்துறை அனுமதி வழங்கியுள்ளது. தமிழகத்தில் புதிய திட்டங்களின் கீழ் வீடு, மனை விற்பனைக்கான பத்திரங்களை, சார்பதிவாளர் அலுவலகத்துக்கு நேரில் செல்லாமல் பதிவு செய்யும் வசதி கடந்த ஆகஸ்டு 17ந்தேதி தொடங்கப்பட்டது. இந்த வசதியில் கட்டுமான நிறுவனங்கள், ரியல் எஸ்டேட் மேம்பாட்டாளர்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு மட்டுமே நுழைவு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வீட்டுவசதி வாரியம் உள்ளிட்ட அரசு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படாததால், அவை பழையநடைமுறையிலேயேபத்திரப்பதிவு மேற்கொண்டு வந்தன.

இந்த நிலையில், பதிவுத்துறை தலைவர் அருண்சுந்தர்தயாளன்பிறப்பித்தஉத்தரவில் கூறியிருப்பதாவது:

வீட்டுவசதி வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுவாரியம், கூட்டுறவுசங்கங்கள், கூட்டுறவுவீட்டுவசதிசங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவையும் நிலம், கட்டிடம் தொடர்பான பத்திரங்களை 'ஆன்லைன்' முறையில் பதிவு செய்யலாம்.

இதற்காக பதிவுத்துறையை தொடர்பு கொண்டு, 'லாக்இன்' எனப்படும் நுழைவு அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தொடர் உரிமை ஒப்படைப்பு ஆவணங்களையும் 'ஆன்லைன்' முறையில் பதிவு செய்யலாம்.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# அந்தரங்க லீலைகளை கண்டுபிடித்த மனைவி; முதலிரவு வீடியோ எடுத்து வெளியிடுவதாக மிரட்டிய டிரைவர் கைது

சீர்காழி, அக். 9

மயிலாடுதுறை மாவட்டம் மங்கைமடம் கிராமத்தை சேர்ந்தவர் அருண்(வயது31). டிரைவரான இவருக்கும். காரைக்கால் பகுதியை சேர்ந்த 22 வயது பெண்ணுக்கும் கடந்த ஜூலை மாதம் 12ந் தேதி திருமணம் நடந்தது. இந்தநிலையில் ஆகஸ்டு மாதம் 28ந் தேதி கணவன்மனைவிக்கு இடையே தகராறு ஏற்பட்டது. அப்போது அருண் தாக்கியதில் காயம் அடைந்த அவரது மனைவி சீர்காழி அரசு ஆஸ்பத்திரி யில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் சீர்காழி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் அருணின் மனைவி ஒரு புகார் அளித்தார். அந்த புகாரில், திருமணத்திற்கு பிறகு தனது கணவரின் நடவடிக்கைகள் மற் றும் செயல்பாடுகள் சரியில்லை. அவரது செல்போனை பார்த்தபோது பல பெண்களுடன் அவர் உல்லாசமாக இருந்துள்ளார். அவற்றை வீடியோவாகவும் எடுத்து வைத்துள்ளார். மேலும் எங்களுக்கு நடந்த முதலிரவையும் வீடியோ எடுத்து வைத்துக்கொண்டு இணையதளத் தில் வெளியிடுவேன் என மிரட்டினார் என்று கூறியிருந்தார். இந்த புகாரின் பேரில் சீர்காழி அனைத்து மகளிர் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து. அருணிடம் விசாரிக்க மங்கைமடம் சென்றனர். போலீசார் தன்னிடம் விசாரணை நடத்த வரு வதை அறிந்த அருண், விஷ இலையை அரைத்து குடித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்யாமல் திரும்பி வந்தனர். இந்த நிலையில் அந்த பெண், மயிலாடுதுறை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சினேகாபிரியாவிடம் தனது கணவர் குறித்து புகார் தெரிவித்தார். இதையடுத்து தலைமறைவாக இருந்த அருணை போலீசார் கைது செய்தனர். தொடர்ந்து அவரது செல்போனை கைப்பற்றி அதில் உள்ள வீடியோ காட்சிகள் குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்.

# அரசு மருத்துவமனையில் பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்ட பெண் ஊழியர் உயிரிழப்பு



சென்னை, அக். 9

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அடுத்த தடப்பெரும்பாக்கம் ஊராட்சியில் வசித்து வருபவர் வினோத் (40). இவரது மனைவிராஜேஸ்வரி(36).இவர்பொன்னேரி அரசு மருத்துவமனையில் தற்காலிக கம்ப்யூட்டர் ஆபரேட்டராக வேலை செய்து வந்தார். கடந்த மாதம் 21ந் தேதி மருத்துவமனை யில் இருந்த ராஜேஸ்வரி மீது ஒருவர் பெட்ரோல் ஊற்றி தீ வைத்து கொளுத்தினார். பொன்னேரியை அடுத்த மாதவரத்தை சேர்ந்த ஆட்டோ டிரைவர் பிரகாஷ் என்பது தெரியவந்தது. ராஜேஸ்வரிக்கும், பிரகாசுக்கும் கள்ளக்காதல் இருந்தது. கள்ளக்காதலை ராஜேஸ்வரி துண்டித்ததால் ஆத்திரம் அடைந்த பிரகாஷ் பெட்ரோலை ஊற்றி தீ வைத்து கொளுத்தியது தெரியவந்தது. இதில் காயம் அடைந்த ராஜேஸ்வரி சிகிச்சைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டார்.அங்குசிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு அவர் பரிதாபமாக இறந்தார். இந்த வழக்கில் தலைமறைவாக இருந்த பிரகாஷ் பொன்னேரி போலீசாரை தாக்கிய நிலை யில் போலீசார் அவரை துப்பாக்கியால் சுட்டு பிடித்து கைது செய்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் (09.10.2026)

மேஷம்: முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கும். பணவரவு சீராகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

ரிஷபம்: வேலைப்பளு அதிகரிக்கலாம். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். செலவுகளில் கவனம் தேவை.

மிதுனம்: புதிய வாய்ப்புகள் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த செய்தி வரலாம்.

கடகம்: குடும்ப விஷயங்களில் நல்ல மாற்றம் ஏற்படும். பணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

சிம்மம்: தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில் அல்லது வேலையில் முக்கியமான முடிவெடுக்கலாம். வருமானம் மேம்படும்.

கன்னி: திட்டமிட்ட காரியங்களை பொறுமையுடன் செய்யுங்கள். தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

துலாம்: உறவுகளில் இருந்த கருத்து வேறுபாடுகள் குறையும். புதிய அறிமுகங்கள் பயனுள்ளதாக அமையும்.

விருச்சிகம்: உழைப்புக்கான அங்கீகாரம் கிடைக்கும். பண விஷயங்களில் சாதகமான நிலை. பயண வாய்ப்பு ஏற்படலாம்.

தனுசு: புதிய முயற்சிகளுக்கு நல்ல நாள். தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்துடன் நேரம் செலவிடுவீர்கள்.

மகரம்: பொறுப்புகள் அதிகரிக்கும். பணவரவு இருந்தாலும் செலவும் கூடலாம். முக்கிய முடிவுகளில் நிதானம் தேவை.

கும்பம்: எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வேலை/தொழிலில்முன்னேற்றம் காணலாம். மனதில் இருந்த குழப்பம் குறையும்.

மீனம்: நல்லசெய்திகள்கிடைக்கவாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் சுபநிகழ்வுகள் பற்றிய பேச்சு வரலாம். பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும்.

# தூத்துக்குடி: கோவிலில் 'ரீல்ஸ்' எடுத்த தவெக பெண் நிர்வாகி மீது புகார்



தூத்துக்குடி, அக். 9

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தைச் சேர்ந்தவர் தேவி, த.வெ.க. மகளிரணி நிர்வாகியாக உள்ளார். இவர் அப்பகுதியில் அழகுநிலையம் நடத்தி வருகிறார். இவர்கடந்தசில நாட்களுக்கு முன்பு தனது பிறந்த நாளையொட்டி, விளாத்திகுளம் மீனாட்சி சுந்தரேஸ்வரர்கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய சென்றார்.

அப்போது அவர் கோவிலுக்குள் நுழைவது, பிரகாரம் மற்றும் நவக்கிரக சன்னதியை சுற்றி வருவது போன்றவற்றை செல் போனில் 'ரீல்ஸ்' வீடியோவாக பதிவு செய்து இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இதுதொடர்பாககோவில் செயல் அலுவலரிடம் பக்தர்கள் புகார் தெரிவித்தனர். இதுகுறித்து கோவில் செயல் அலுவலர் உமா மகேஸ்வரி, விளாத்திகுளம் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில், போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேபோன்று கடந்த சில நாட்களுக்கு முன்பு விளாத்திகுளத்தைச் சேர்ந்த மற்றொரு இளம்பெண் ஒருவரும் தனது பிறந்த நாளையொட்டி மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலுக்கு சென்று 'ரீல்ஸ்' வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிட்டதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாகவும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# அடுத்த வாரம் தொடங்குகிறது தனுஷின் 'டி56' படப்பிடிப்பு



இப்படத்தின் படப்பிடிப்பை அடுத்த வாரம் முதல் சென்னையில் தொடங்க படக்குழு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நடிகர் தனுஷ் நடிப்பில் உருவாகி வரும் புதிய திரைப்படம் 'டி56'. இப்படத்தை 'லப்பர் பந்து' படத்தின் மூலம் கவனம் பெற்ற இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து இயக்குகிறார். மதுரையை பின்னணியாகக் கொண்டு உருவாகும் இப்படத்தில் தனுஷுடன் எஸ்.ஜே.சூர்யா, பிரீத்தி முகுந்தன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். சாய் அபயங்கர் இசையமைக்கிறார்.

'டி56' படத்தின் பூஜை கடந்த செப்டம்பர் 25ந்தேதி சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாரநாடு கருப்பணசாமி கோவிலில் நடைபெற்றது. இதில் நடிகர் தனுஷ் உள்ளிட்ட படக்குழுவினர் கலந்து கொண்டனர்.

படம் வெற்றி பெற வேண்டி மாரநாடு கருப்பணசாமிக்கு தனுஷ் 18 அடி நீளமுள்ள அரிவாளை காணிக்கையாக வழங்கினார். மேலும், நிகழ்ச்சியை முன்னிட்டு 16 கிடாக்கள் வெட்டி ரசிகர்களுக்கு விருந்து வழங்கப்பட்டது. பூஜை தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தன.

இந்த நிலையில், 'டி56' படத்தின் படப்பிடிப்பு தொடர்பான புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் படப்பிடிப்பை அடுத்த வாரம் முதல் சென்னையில் தொடங்க படக்குழு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மதுரையை பின்னணியாகக் கொண்ட கதைக்களம் என்பதால், அடுத்தகட்ட படப்பிடிப்பு மதுரை உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறுமா என்ற எதிர்பார்ப்பும் ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

# தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜை நேரில் அழைத்து பாராட்டிய ரஜினி



ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் உள்பட மூன்று பதக்கங்களை வென்ற வித்யா ராம்ராஜை நடிகர் ரஜினிகாந்த் நேரில் அழைத்துப் பாராட்டியுள்ளார்.

ஜப்பானில் நடந்து முடிந்த 20வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் மகளிருக்கான 400 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியின் இறுதிச் சுற்றின் இறுதிப் பகுதியில் அபாரமாக ஓடி தங்கம் வென்று, இந்தியாவின் கனவை நனவாக்கினார்.

அதேபோல் கலப்பு 400 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தவர், 400 மீட்டர் தடை ஓட்டத்தில் 54.75 விநாடிகளில் இலக்கைக் கடந்து வெண்கலம் வென்றதுடன், ஜாம்பவான் பி.டி. உஷாவின் 42 ஆண்டுகால தேசிய சாதனையை முறியடித்திருந்தார்.

இவர் கடந்த அக்டோபர் 3ம் தேதி சொந்த ஊரான கோவைக்கு திரும்பினார். ஆசிய விளையாட்டு போட்டியில் சாதனை படைத்து திரும்பி இருக்கும் தடகள வீராங்கனை வித்யாவை அரசியல் தலைவர்கள் பாராட்டி வருகின்றனர்.

இந்த நிலையில், சென்னை போயஸ் கார்டன் இல்லத்துக்கு வித்யா ராம்ராஜை நேரில் வரவழைத்த நடிகர் ரஜினிகாந்த் அவரை பாராட்டி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முன்னதாக நடிகர் தனுஷும் வித்யா ராம்ராஜை நேரில் வரவழைத்து பாராட்டு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு அரசு சார்பில் வித்யா ராம்ராஜுக்கு ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், முதல்அமைச்சர் விஜய் பங்கேற்கும் பாராட்டு நிகழ்ச்சி மற்றும் விருந்தில் இன்று மாலை அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

# லியோ சிவக்குமார், பிரிகிடா நடித்த 'டெலிவரி பாய்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




'டெலிவரி பாய்' திரைப்படத்தின் வெளியீட்டுத் தேதியை படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதன்படி, இப்படம் வரும் 23ந்தேதி திரையரங்குகளில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர் சுசீந்திரனிடம் உதவி இயக்குநராக பணியாற்றிய நானி, 'டெலிவரி பாய்' திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இப்படத்தில் திண்டுக்கல் லியோனியின் மகன் லியோ சிவக்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக பிரிகிடா நடித்துள்ளார். இப்படத்தில் ராதிகா சரத்குமார், போஸ் வெங்கட், காளி வெங்கட், துஷ்யந்த் ஜெயபிரகாஷ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். சுந்தரமூர்த்தி இசையமைத்துள்ளார்.

'டெலிவரி பாய்' படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து படத்தின் டீசரை நடிகர் விஜய் சேதுபதி வெளியிட்டார். ரசிகர்கள் மற்றும் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்த டீசர், படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து படத்தின் பாடல்களும் அடுத்தடுத்து வெளியாகி கவனம் பெற்றன.

இந்த நிலையில், 'டெலிவரி பாய்' திரைப்படத்தின் வெளியீட்டுத் தேதியை படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதன்படி, இப்படம் வரும் 23ந்தேதி திரையரங்குகளில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனா ஓபன் டென்னிஸ்: கரோலினா முச்சோவா தோல்வி



சீனா ஓபன் டென்னிஸ் தொடர் சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெற்றது. இந்நிலையில், மகளிர் ஒற்றையர் பிரிவில் காலிறுதி சுற்றில் செக் குடியரசு நாட்டின் கரோலினா முச்சோவா, சக வீராங்கனையான நிக்கோலா பார்டுன்கோவா மோதினர். பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய நிக்கோலா பார்டுன்கோவா 63, 60 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு காலிறுதி சுற்றில் ரஷிய நாட்டை சேர்ந்த , எகடெரினா அலெக்சாண்ட்ரோவா, மிரா ஆண்ட்ரீவா ஆகியோர் மோதுகின்றனர்.

# ஜிம்பாப்வே அணிக்கு எதிரான டி20 தொடரை வென்ற வெஸ்ட் இண்டீஸ்



ஜிம்பாப்வே அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரை வெஸ்ட் இண்டீஸ் மகளிர் அணி 30 என முழுமையாக கைப்பற்றியது. ஹராரேவில் நடைபெற்ற 3வது மற்றும் கடைசி டி20 போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதலில் பேட்டிங் செய்த ஜிம்பாப்வே அணி, இந்தத் தொடரில் தனது சிறந்த ஸ்கோரை பதிவு செய்து 20 ஓவர்களில் 142/6 ரன்கள் எடுத்தது. அந்த அணியின் கெலிஸ் ந்த்லோவு சிறப்பாக விளையாடி 48 பந்துகளில் 65 ரன்கள் எடுத்தார். இதில் 6 பவுண்டரிகளும் 3 சிக்ஸர்களும் அடங்கும். கிறிஸ்டின் முடாசா ஆட்டமிழக்காமல் 24 ரன்கள் சேர்த்தார்.

143 ரன்கள் என்ற இலக்கை துரத்திய வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு ஸ்டெஃபனி டெய்லர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் வெறும் 39 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 64 ரன்கள் விளாசி அணியின் வெற்றியை எளிதாக்கினார். இதன் மூலம் வெஸ்ட் இண்டீஸ் அணி 17 ஓவர்களிலேயே 2 விக்கெட் இழப்புக்கு 143 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. டெய்லரின் அனுபவமும் அதிரடியான பேட்டிங்கும் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தது.

வெஸ்ட் இண்டீஸ் தொடரை 30 என கைப்பற்றி ஜிம்பாப்வே அணிக்கு எதிரான முழுமையான தொடர்வெற்றியை பதிவு செய்தது.

# சீனா ஓபன் டென்னிஸ்: இரட்டையர் பிரிவில் பிரிட்டிஷ் ஜோடி சாம்பியன்



சீனா ஓபன் டென்னிஸ் தொடர் சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெற்றது.

இந்நிலையில், ஆண்கள் இரட்டையர் பிரிவில் பிரிட்டிஷைச் சேர்ந்த ஜூலியன் கேஷ்லாயிட் கிளாஸ்பூல் ஜோடி, நெதர்லாந்தின் சாண்டர் அரெண்ட்ஸ்டேவிட் பெல் ஜோடி உடன் மோதியது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய பிரிட்டிஷ் ஜோடி 63, 36, 106 என்ற செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

சீனா ஓபன் டென்னிசில் ஆண்கள் இரட்டையரில் பட்டம் வெல்லும் முதல் பிரிட்டிஷ் ஜோடி இவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தான் அணியின் திட்டத்தில் நபி : பைபஸ்



ஆப்கானிஸ்தான் அணியின் அனுபவமிக்க ஆல்ரவுண்டர் முகமது நபி, இனி வரும் தொடர்களுக்கான அணியின் திட்டங்களில் தொடர்ந்து இடம்பெறுவார் என்று ஆப்கானிஸ்தான் அணியின் தலைமை நிர்வாகி பிலிப் பைபஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் நீண்ட கால அனுபவம் கொண்ட நபி, ஆப்கானிஸ்தான் அணியின் முக்கிய வீரர்களில் ஒருவராக இருந்து வருகிறார். அவரது அனுபவமும் ஆல்ரவுண்டர் திறமையும் அணிக்கு தொடர்ந்து தேவையாக இருப்பதாக பைபஸ் கூறியுள்ளார். குறிப்பாக இளம் வீரர்கள் அதிகளவில் அணியில் இடம்பிடித்து வரும் நிலையில், நபியின் அனுபவம் அணிக்கு முக்கியமானதாக இருக்கும் என ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம் கருதுகிறது.

இதனால் நபி விரைவில் அணியில் இருந்து ஓரங்கட்டப்படுவார் என்ற பேச்சுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பைபஸின் கருத்து அமைந்துள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.